புதிய தலைமுறை அறக்கட்டளை

**FMSE - CHENNAI**

FORUM FOR MICRO & SMALL ENTERPRISES - CHENNAI

(A Unit of Puthiya Thalaimurai Foundation)

சுயதொழில் மன்றம்

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

## In Associate with

Shevaroys
Innovating Hospitality

### சுய தொழில் விழிப்புணர்வு கருத்தரங்கம்

### ஏற்றுமதி & இறக்குமதி தொழில் வாய்ப்புகள் – ஏற்காடு

புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றம் மற்றும் சேர்வராய்ஸ் காலேஜ் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங் டெக்னாலஜி, ஏற்காடு இணைந்து ஏற்றுமதி & இறக்குமதி தொழில் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கினை ஜூன், 15 & 16, 2019 ஆகிய 2 நாட்கள் ஏற்காடு, சேர்வராய்ஸ் காலேஜ் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங் டெக்னாலஜி கல்லூரியில் நடத்தியது. காலை 10.00 மணி அளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி துவங்கியது.



**மேடையில் சிறப்பு விருந்தினர்கள் அமர்ந்திருந்த காட்சி**



**திரு. R. தேவதாஸ், நிர்வாக இயக்குனர், சேர்வராய்ஸ் காலேஜ் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங் டெக்னாலஜி, ஏற்காடு அவர்கள் துவக்கவுரையாற்றிய காட்சி**

பின்னர் N. சுகுமார், முதல்வர், சேர்வராய்ஸ் காலேஜ் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் & கேட்டரிங் டெக்னாலஜி அவர்கள் வரவேற்புரையாற்றினார். து.வே. வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் திரு. எஸ். சிவராமன், Consultant & Trainer (Foreign Trade Policy & Customs Law), Chennai அவர்கள் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புள்ள பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் வழிமுறைகள், இறக்குமதியாளரை கண்டறியும் வழிமுறைகள், ஏற்றுமதி வர்த்தகத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து இணையதளத்தை பயன்படுத்தி கண்டறியும் முறைகளையும், சுலபமாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் விரிவாக எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, நாமக்கல், கரூர், சேலம், தர்மபுரி போன்ற ஊர்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் (16.06.2019) மாலை 6.00 மணியளவில் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

" ஏற்றுமதியில் முக்கியமான டாக்குமெண்ட்கள் என்று பார்க்கபோனால் இன்வாய்ஸ், பில் ஆப் லேடிங் அல்லது ஏர்வே பில் ஆகியவை மிகவும் முக்கியமான டாக்குமெண்ட்களாக கருதப்படும். மற்ற டாக்குமெண்ட்கள் தேவையெனில் கொடுத்தால் போதும். "



**பார்வையாளர்கள் தங்கள் பெயரை பதிவு செய்த காட்சி**




**புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயாலாளர் அவர்கள் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கிய காட்சி**



**பார்வையாளர்கள் கூட்டத்தின் ஒரு பகுதி**



**பயிற்சி வகுப்பில்.........**

---

**புதிய தலைமுறை அறக்கட்டளை**

**எண். 24, ஜி.என்.செட்டி சாலை, சென்னை – 600 017 | தொலைபேசி: 044 28341219**

**மின்னஞ்சல்: sm@ptfindia.org | வலை: www.fmsechennai.org**